RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt21s242

OPEN ACCESS

# திரு அருட்பா வலியுறுத்தும் இறைநெறிக் கொள்கையும் கோட்பாடும்

பா. விஜயகுமார் [அ, *]

[அ] நவீன இந்திய மொழிகள் மற்றும் இலக்கியப் பயில் ஆய்வுத்துறை, கவுகாத்திப் பல்கலைக் கழகம், குவகாத்தி, அஸ்ஸாம்-781014, இந்தியா.

# Theological principle and doctrine emphasized by Thiruvarutha

**B. Vijayakumar [a, *]**

[a] Department of Modern Indian Languages and Literary Studies, Gauhati University, Assam -781014, India

* Corresponding Author: vijayakumar.ciil@gmail.com

Received: 04-01-2021
Revised: 19-04-2021
Accepted: 21-04-2021
Published: 30-04-2021

Check for updates

**ABSTRACT**

Vadalur Vallalar is one of the most remarkable people who have contributed literature to the upliftment of human society. He has a unique composition called 'Thiru Arutpa'. He identified God as a blessing and wanted other beings to see God. He showed the world the principle of the spirit, the highest goal, the spirit of the spirit, by saying that the way to reach God is the life-giving principle of life. This article is a description of the principles and principles of the theology in his thiruvarutpa.

**Keywords:** Vallalar, Thiruvarutpa, Spirit, Thiru Arutpa.

## முன்னுரை

உலக நாடுகளுக்கிடையே பாரத பூமி என்றைக்கும் ஆன்மீகம் தழைத்து ஓங்கும் புண்ணிய பூமி. நம்முடைய தண்டமிழ்நாடு என்று போற்றப்படும் வடவேங்கடம் முதல் தென்குமரி வரை உள்ள தமிழ் கூறும் நல்லுலகம் பல அருளாளர்களை, ஈன்று பெருமை பெற்றுள்ளது. திருமூலர் தோன்றி திருவள்ளுவர், பட்டினத்தடிகள், மாணிக்கவாசகர், தாயுமானவர் பின்பு வள்ளலார் என்று அந்த வரிசை நீண்டு கொண்டுள்ளது. வள்ளலார் அருளாளர்கள் வரிசையில் உதித்த பேரருளாளர். தொடக்கத்தில் சைவசமயத்தில் ஆழ்ந்த பற்று வைத்து சைவத்தைப்போற்றி நின்ற வள்ளலார் இறுதி நாட்களில் சமயம் என்ற கட்டுப்பாட்டை விட்டு வெளியே வந்து அகில அண்டத்தையும் தழுவிய ஆன்ம நேய ஒருமைப்பாட்டினை முழங்கினார். மனிதன் மனிதனாக வாழ்வது மட்டுமின்றி மனிதனும் இறைநிலையை அடைய வேண்டும் என்று வலியுறுத்தினார். கருணையால், அன்பால், இரக்கத்தால், அருளால் இறைவனை அடையலாம் என்று கூறினார். அவர் இக்கருத்துக்களை வலியுறுத்திப் பாடிய திருவருட்பா என்பது 5818 பாடல்களின் தொகுப்பைக் கொண்டது. இதில் 399 பதிகங்கள் உள்ளன. ஆசிரிய விருத்த நடையில் பாடப்பட்டுள்ள இப்பாடல்கள் ஆறு தொகுப்புகளாக தொகுக்கப்பட்டுள்ளன. இப்பாடல்கள் தம்முடைய சுய அனுபவங்களையும் ஆன்மீக பெரு உணர்வையும் கூறுவன. எல்லாப் பாடல்களும் இறைவனை முன்னிறுத்திப் பாடப்பெற்றவையே. இப்பாடல்கள் முற்போக்குச் சிந்தனைகளையும் வளமான வாழ்விற்கான வழிமுறைகளையும் கொண்டவை. குறிப்பாக அன்றைக்கு நிலவிய சமயச் சீர்கேடுகளைச் சாடி, சீர்திருத்தத்தை வலியுறுத்துபவை.

## வள்ளலார் காலத்திய சமயப் போக்குகள்

வள்ளலார் காலத்தில் சமூகமும், சமயமும் குறைகள் நிறைந்ததாக இருந்தது. சமயப் பூசல், சாத்திரங்களின் பெயரால் அறியாமை, சாதி உயர்வு தாழ்வு என்பன இதில் முக்கியமானவை. இவற்றைக் களைய விரும்பினார் வள்ளலார். சமயம், மதம் என்பன இருவேறு சொற்களானாலும் பொருள் அள்வில் ஒன்றே. இதை விளக்கிக் கூறும் தேவநேயன், "ஒரு தெய்வத்தை அல்லது இறைவனை மதித்து வழிபடுவது மதம், இறைவனை இம்மையிலேனும் மறுமையிலேனும் அடைவதற்கு வழிவகை செய்வது சமயம்" என்கிறார். உலகில் பல சமயங்கள் உள்ளன. இச்சமயங்கள் மக்களை நல்வழிப்படுத்தி நேர்வழியில் உயர்ந்த நெறிமுறைகளோடு வாழ்ந்திட வழிகாட்டுகின்றன. மக்களையும் சமுதாயத்தையும் நல்வழிப்படுத்துபவை சமயங்கள். சமயங்கள் எதுவாக இருப்பினும் அவை மக்களை இறை உணர்வோடு பிணைக்கின்றது. எல்லாச் சமயங்களும் மனித சக்திக்கு மேலான ஒன்று உண்டு என்பதை வலியுறுத்தி அதைப் பல்வேறு வழிமுறைகளால் வணங்கியும் வழிபடவும் செய்கின்றன. மனிதனிடத்தில் மறைந்துள்ள தெய்வீகப் பண்புகளையும் ஆற்றல்களையும் வெளிப்படுத்துவது சமயம் எனலாம் (Innashi, S., 1993). இச்சமயத்தின் ஊடாக சமூக சீர்திருத்தத்தை செய்ய வள்ளலார் கண்ட நெறி 'சன்மார்க்க நெறி' என்பதாகும்.

## வள்ளலாரின் சன்மார்க்க நெறி

வள்ளலார் தொடக்க காலத்தில் தன் கொள்கைகளை 'சமரச வேத சன்மார்க்கம்' என்றார். பின்னர் 'சமரச வேத சன்மார்க்கம்' என்பதில் 'வேத' என்னும் சொல்லை எடுத்துவிட்டு 'சுத்த' எனும் சொல்லைச் சேர்த்து 'சுத்த சன்மார்க்க சங்கம்' என்று பெயரிட்டார். தமிழ் இலக்கிய உலகில் திருமந்திரமே முதன் முதலில் 'சன்மார்க்கம்' என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளது.

"சுத்தமுஞ் சுத்த மன்னுந் தகுமனம்

உய்த்த உணர்வு முணர்த்தும் அகந்தையுஞ்

சித்தமென் றிம்மூன்றும் சிந்திக்குஞ் செய்கையுஞ்

சுத்தங் கடந்தவர் பெற்றசன் மார்க்கமே" என்ற பாடலில் சன்மார்க்கம் என்பது 'மெய்நெறி' என்ற பொருளில் இடம்பெற்றுள்ளது. இறையடியார்களின் வழித்தோன்றலாக தன்னை கருதிய வள்ளலார் தம் முன்னோர் பயன்படுத்திய சன்மார்க்கம் என்னும் நெறியை ஏற்றுக்கொண்டார். சன்மார்க்கம் என்ற சொல் சைவ அடியார்கள் பயன்படுத்திய பொருளிலேயே வள்ளலாராலும் கையாளப்பட்டுள்ளது. சைவ சமயத்தை பின்பற்றுதலையே சன்மார்க்கம் என்று இவர் கருதியதை,

"இனிய நீறிடும் சிவனடி யவர்கள்

எம்மைக் கேட்கினும் எடுத்தவர்க்கீக

இனிய நன்னெறி ஈதுகாண்"

என்ற பாடல் வழி அறிய முடிகிறது (Saravananandha, 1990). ஆயின், பிற்காலத்தில் இவர் கொண்டிருந்த சமரச சுத்த சன்மார்க்கத்தின் விளக்கத்தை இவர் தொடக்க காலத்தில் கொண்டிருக்கவில்லை. வள்ளலார் கண்ட சன்மார்க்கம் மரபுவழியிலிருந்து மாறுபடுகிறது. இதனால் தான் இதை 'சுத்த சன்மார்க்கம்' என்றும் 'சமரச சன்மார்க்கம்' என்றும் குறிப்பிட்டுள்ளார். வள்ளலார் தான் அமைக்கும் நிறுவனம் சமயம் மதம் கடந்ததாக இருக்க வேண்டும் என்று எண்ணினார். வள்ளலாருக்கு முன்பிருந்த ஆழ்வார்கள், நாயன்மார்கள், சித்தர்கள் மடங்களை அமைத்து தொண்டு செய்து வந்தனர். இவை சமயம் சார்ந்ததாக இருந்தது. ஆதலால் மடம் எனப் பெயரிடாது சங்கம் என்று பெயரிட்டார். மடம் என்பது, துறவறம் மேற்கொள்வோருக்கும் ஆடவருக்கும் உரியதாக இருந்தது. இல்வாழ்வோருக்கும் இருபாலருக்கும் பொதுவாக இருக்க சங்கம் எனப்பெயரிட்டு அனைவரையும் இழுத்து திருத்த வேண்டும் என்ற நோக்கம் இருந்ததை இங்கு உணர முடிகிறது. இவர் கண்ட சன்மார்க்கம் அன்றைக்கு நடைமுறையில் இல்லாத புதிய கொள்கைகளைக் கொண்டது.

## சன்மார்க்க கொள்கைகள்

வள்ளலாரின் சுத்த சன்மார்க்க நெறியைப் பின்பற்றி பயன் அடைய விரும்புவோருக்குத் தன்னளவில் கடை பிடிக்க வேண்டிய பத்து வழிமுறைகளாவன,

- கடவுள் ஒருவரே, அவரை ஜோதி வடிவில் வழிபட வேண்டும்
- சிறுதெய்வ வழிபாடு கூடாது.
- சிறுதெய்வ வழிபாட்டின் பெயரால் உயிர்ப்பலி செய்தல் கூடாது (கொல்லாமை)
- புலால் உண்ணாமை
- புராணங்களிலும் சாத்திரங்களிலும் நம்பிக்கை தவிர்த்தல்
- மூடப்பழக்க வழக்கங்களை ஒழித்தல்
- அணிகலன்கள் அணிவதை தவிர்த்தல்
- மனைவியை இழந்தோர் மறுமணம் செய்து கொள்ளாமை
- கணவனை இழந்த பெண்கள் தாலி வாங்குதல் வேண்டாமை
- வள்ளலார் குறிப்பிட்ட ஒழுக்கங்களை மிகச்சரியாகக் கடை பிடித்தல்

என்பனவாகும். இக்கட்டுரையின் விரிவஞ்சி இக்கட்டுரையில் ஒருசில கொள்கைகளும், ஜீவகாருண்யக் கோட்பாடு மட்டும் விளக்கப்படுகின்றன.

## கடவுள் ஒருவரே

வள்ளலாரின் இறைக்கொள்கையானது இறைவன் ஒருவரே அவனை ஜோதி வடிவில் வழிபட வேண்டும் என்பதே. இக்கொள்கைக்கு வள்ளலாருக்கு முந்தோன்றியவர்களின் எண்ணப்போக்கு காரணமாக இருக்கலாம். இறைவன் ஒருவனே என்பதை திருமூலர், 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்றும் மாணிக்கவாசகர் 'ஒருவர் என்னும் ஒருவன் காண்க' என்று கூறியிருப்பது இதற்குச் சான்று. இதேபோல் வள்ளலாரும் கடவுள் ஒருவரே என்ற கொள்கையை வலியுறுத்துகிறார். உடலுக்கு உயிர் ஒன்றுதானே தவிர இரண்டு, மூன்று இல்லை. அதுபோல இறைவனும் ஒன்றுதான் என்பதை,

"உருவ ராகியும் அருவின ராகியும்

உருஅரு வினராயும்

ஒருவ ரேஉளர் கடவுள் கண்டறிமினோ…."

என்று கூறுகிறார் (Saravananandha, 1990). இதில் இறைவன் ஒன்று என்றும், அவன் அருட்பெருஞ்ஜோதி வடிவினனானவன் என்ற தெளிவான ஒரு இறைக்கொள்கையைக் கூறுகிறார். இவரின் கொள்கைகளில் இரண்டாவதாக வருவது உயிர் வதை தடுப்பும், புலால் உண்ணாமையும் ஆகும்.

## கொல்லாமை

ஆடு, கோழி, கடா போன்றனவற்றை வழிபாட்டின் பெயரால் கொல்லப்படுதலைக் கண்டு மனம் நொந்து சிறுதெய்வ வழிபாட்டையே வெறுத்தார். உயிர் தாங்கிய உடல்களே இறைவன் எழுந்தருளியிருக்கின்ற திருக்கோயில், உடலை வெட்டுவது கோயிலை இடிப்பதற்குச் சமம் என்று கருதினார். உயிர்வதை கண்டு தாம் வருந்தியதை,

"துண்ணெனக் கொடியோர் பிறவுயிர் கொல்லத்

தொடங்கிய போதெல்லாம் பயந்தேன்

கண்ணினால் ஐயோ பிறஉயிர் பதைக்கக்

கண்ட காலத்திலும் பதைத்தேன்”

என்கிறார். ‘வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்’ என்று மனமுருகும் வள்ளலாரின் மன நிலையினை இதன்மூலம் அறியலாம். வள்ளலார் உயிர்களிடத்துக் காட்டும் இரக்க உணர்வினால் தமது சன்மார்க்க கொள்கைகளில் ஒன்றாக கொல்லாமையை வகுத்தார். தான் வாழ்ந்த காலத்தில் கொல்லாமை, புலால் உண்ணாமை ஆகிய பழக்கங்களைப் பெரிதும் வலியுறுத்தினார் (Saravananandha, 1990).

## புலால் உண்ணாமை

கொல்லுதலும், புலால் உண்ணுதலும் ஒன்றுக்கொன்று தொடர்புடையது. புலால் உண்ணுதல் பொருட்டே கொள்ளுதல் நிகழ்கிறது. எனவே, புலாலை மறுத்தால் கொல்லுதல் நிறுத்தப்படும் என்று கூறி அவற்றை விலக்க வேண்டினார்.

“உறவினத்தார் அல்லர் அவர் புறஇனத்தார் அவர்க்குப்

பயிர்ப்புறும் ஓர் பசிதவிர்த்தல் மாத்திரமே புரிக

பரிந்து மற்றைப் பண்புரையேல் நண்புதவேல் இங்கே

நயப்புறுசன் மார்க்கம் அவர் அடையாளம் இதுதான்

நம்ஆணை என்றெக்கு நவின்ற அருள்இறையே”

என்று உயிர்க்கொலை செய்வோரையும் புலைபுசிப்போரையும் கூறுகிறார் (Saravananandha, 1990). இத்திருவருட்பாவில் கொலை, புலை மேற்கொண்டோரை புறவினத்தார் என்ற சொல்லால் சாடுகிறார். வள்ளலார் உயிர் இரக்கத்தை இறைவனை அடைய ஏற்ற வழிமுறையாக உருவாக்கினார். உயிரிரக்கம் உலகிற்குப் புதிதல்ல. ஆனால் இறைவனை அடைய அதை ஒரு வழிமுறையாகக் கொண்டது புதுமையானது.

வள்ளலார் சமுதாய நன்மைகருதி சில ஒழுகலாறுகளை வலியுறுத்தி கூறியுள்ளார். அவற்றுள் முதன்மையானது ‘உயிர் இரக்கக் கோட்பாடு’ அதாவது ஜீவகாருண்யம்.

## உயிர் இரக்கக் கோட்பாடு

வள்ளலாரின் மிகச்சிறந்த கோட்பாடாக விளங்குவது அன்பு, அருள், இரக்கம், ஜீவகாருண்யம் முதலிய நற்குணங்களைப் போற்றுவதாகும். இந்நற்குணங்களை மக்கள் பெற்றுய்ய வேண்டுமென உபதேசமும் செய்தார். வள்ளலார் காலத்திற்கு முன்பும் தமிழகத்தில் வாழ்ந்த சான்றோர்களும் உயிர்களிடத்து அன்புகாட்ட வேண்டுமென்று கூறினர். வள்ளுவர் பிற உயிர்கள் படும் துன்பத்தை அறிந்துகொண்டு அத்துன்பத்தை தானே அனுபவிப்பதாக உணரவேண்டும் என்கிறார், இதனை,

“அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்

தன்னோய்போல் போற்றாக் கடை”

என்கிறார் (Thiruvalluvar, 1993). திருமூலரும் சிவமும் அன்பும் ஒன்றே என்பதை,

“அன்பும் சிவனும் இரண்டெண்பர் அறிவிலார்

அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்

அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்

அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே”

என்று பாடுகிறார் (Uran Adigal, 1990). சைவ சமயக் குரவர்கள் நால்வருள் ஒருவரான நாவுக்கரசர்

“இரப்பவர்க்கு ஈயவைத்தார் ஈபவர்க்குஅருளும் வைத்தார்

கரப்பவர் தங்கட்கெல்லாம் கடுநரகந் தன்னைவைத்தார்”

என்கிறார். இதில் இறைவனிடத்தில் மட்டுமே அன்பு காட்டினால் போதுமானது பிற உயிர்களிடத்தில் அன்பு செய்ய தேவையில்லை என்போரை நரகமே கிட்டும் என எச்சரிக்கை செய்வது போல் உள்ளது மேற்கண்ட பாடல்.

தாயுமானவர் பிற உயிர்களைத் தம் உயிர்போல் எண்ணுவோரை தவத்தால் மிக்கவர்கள் அவர்களை நாடும் நற்பேறு தமக்கு எப்போது வாய்க்குமோ என்பதனை,

“எனவ்வுயிரும் தம்முயிர்போல் எண்ணுந் தபோதனர்கள்

செவ்வறிவை நாடிமிகச் சிந்தை வைப்பதெந்நாள்”

என்று கூறுகிறார் (Ramanatha pillai, 1975). உயிர்களிடம் செலுத்தும் அன்பைக்கொண்டே சன்மார்க்க நெறியாளர்கள் இவர் என அறியலாம். வள்ளலார் உயிர் இரக்கத்தை வலியுறுத்தியது போல இதுநாள் வரை யாரும் வலியுறுத்திக் கூறவில்லை. அதேபோல், பசி தவிர்த்தலின் சிறப்பை மணிமேகலைக்குப் பிறகு வள்ளலார் போன்று யாரும் கூறவில்லை. வள்ளலாரின் கொள்கைகளில் தலையானது ஜீவகாருண்யம். இவற்றை இரண்டு வகைகளில் வலியுறுத்தி கூறுகிறார்.

- பசி தீர்த்தல்
- புலால் மறுத்தல்

இவ்விரண்டையும் வலியுறுத்தியே ஜீவகாருண்யத்தை முன்வைக்கிறார். ஜீவகாருண்ய ஒழுக்கம் என்பது கடவுள் கொள்கை. அவர்கூறிய அருந்தொடர்களாவன,

- ஜீவகாருண்ய ஒழுக்கமே கடவுள் வழிபாடு
- ஜீவகாருண்ய ஒழுக்கமே சன்மார்க்கம்
- ஞானவழி என்பதும் சன்மார்க்கம் என்பதும் ஜீவகாருண்ய ஒழுக்கம்
- அஞ்ஞான வழி என்பதும் துன்மார்க்கம் என்பதும் ஜீவகாருண்ய ஒழுக்கமில்லாமை.
- புண்ணியம் என்பது ஜிவகாருண்யம் ஒன்றே
- பாவம் என்பதும் ஜீவகாருண்ய ஒழுக்கம் இல்லாமை என்பதும் ஒன்றே
- ஜீவகாருண்ய விளக்கத்தினால் வரும் இன்பமே கடவுள் இன்பம்

நரக வேதனை, ஜனன வேதனை, மரணவேதனை, என்கின்ற மூன்று வேதனைகளுங்கூடிமுடிந்த வேதனையை விட பசி வேதனை மோக்ச இன்பமே ஆகாரத்தினால் உண்டாகும் திருப்தியின்மை. இக்கருத்துக்களின்படி பசித்துன்பமே நரகம். பசி நீங்கிய இன்பமே வீடுபேறு என்பதை அறியமுடிகிறது.

## முடிவுரை

சமுதாய ஒழுக்கங்களை நெறிப்படுத்தி மக்களை நல்லாற்றுப்படுத்துவதையே திரு அருட்பாவின் கொள்கைகளும் கோட்பாடுகளும் உணர்த்துகின்றன. சமூக அமைப்பில் மக்கள் பிரிந்து ஒற்றுமை இல்லாதிருந்த காலகட்டத்தில் சமயம், சாதி, சாத்திரம் அற்ற ஒப்பற்ற புதிய சமுதாயத்தை உருவாக்க கருதிய வள்ளலார், சமரச சுத்த சன்மார்க்கம் என்ற அமைப்பினை உருவாக்கியதை உணரமுடிகிறது. எல்லாச் சமயத்தினரும் ஒருமைப்பாடு கொண்டு விளங்க வேண்டுமானால் முதலில் உள்ளத்தில் பரந்த அன்பு அல்லது கருணையும் தோன்ற வேண்டும். இதற்காக வள்ளலார் கண்டு வகுத்த கோட்பாடே ஜீவகாருண்ய கோட்பாடாகும். இகோட்பாடு ஒரு நூற்றாண்டிற்கு மேலானவை என்றாலும் சமுதாயத்தின் கோணல்களை நிமிர்த்தக் கூடியவையாக இன்றும் உள்ளதை நடைமுறை வாழ்வில் காணமுடிகிறது.

## References

Innashi, S., (1993) Society and Religion, Madras University, Chennai, India

Ramanatha pillai, (1975) Thayumanvadigal thirupadalgal, Kazhaga Veliyedu, Chennai, India

Saravananandha, (1990) Thiruvarutpa, Ramalingar Panimandram, Chennai, India

Thiruvalluvar, (1993) Thirukkural, Parimelazhagar Urai, Poombukar pathippagam, Chennai, India

Uran Adigal (1990) Thiruvarutpa Urainadipakuthi, Ramalingar Panimandram, Chennai, India

**Funding:** NIL
**Acknowledgement:** NIL
**Conflict of Interest:** NIL
**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License